# சுவாமி ராம தீர்த்தர்

w : 565

இது
திருக்குறள் நீதிக்கதைகள், பாபு ராஜேந்திரப் பிரசாத்,
காங்கிரஸ் சரித்திரம், பண்டித மதன் மோகன்
மாளவ்யா, பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி ராய்,
இராணி லட்சுமீபாய் முதலிய நூல்களின் ஆசிரியர்,

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

இயற்றியது

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

விவேக போதினி காரியாலயம்
மயிலாப்பூர், சென்னை.

காபிரைட்] [அணா

# ஆரியமத உபாக்யானம்

எங்கள் வெளியீடுகளில் தலைமை வகிப்பது. தெலுங்கு, கன்னடப் பதிப்புகளும் உண்டு. **150,000** — பிரதிகளுக் கதிகம் செலவாகியிருப்பதே, இவைகளின் சிறப்புக்கும் உயர்வுக்கும் தகுந்த அத்தாட்சி அல்லவா? இவைகளில், அரிய நீதிக் கதைகளும், கண்ணைக் கவரும் போடோ படங்களும் நிறைந்துள்ளன. சிறுவர் சிறுமிகளும் களிப்புடன் வாசிக்கக் கூடிய எளிய நடையில் எழுதப்பட்டவை.

**காகிதம், அச்சு, பைண்ட் மிக நேர்த்தி**

(முதல் பாகம், 23-ம் பதிப்பு) விலை அணு 8

(2-ம் பாகம், 17-ம் பதிப்பு) விலை அணு 10

b195a

உ

# சுவாமி ராம தீர்த்தர்

## 1. முன்னுரை

"அன்ப! தேசபக்தனாக விளங்க உனக்கு ஆவல் உண்டா? உண்டாயின், தேசத்தினிடம் நேசம் கொள்; தேச மக்களிடம் பாசம் காட்டு; தேசமக்களும் நானும் ஒருவரே என்று எண்ணி நட; 'நான்' 'எனது' என்று கனவிலும் கருதாதே; தேச நலங் கருதி, உயிரையும் வழங்கும் மெய்ஞ்ஞான சேவகனாய் விளங்கு. இந்நிலையில் உனது சக்தி ஓங்கி உயரும்; நீ யாது நினைப்பினும், அவ்விதமே தேசமும் நினைக்கும்; நீ முன்னேக்கம் கொள்ளின், தேசம் உன்னைப் பின்பற்றும்; உனது அறிவும் ஆற்றலும் தேசமக்களிடம் பிரதிபலிக்கும்."

இவ்விதம் போதம் புகட்டியவரே தேசீய வீரத்துறவியான சுவாமி ராம தீர்த்தர். இவர் பஞ்சநதப் பிரதேசத்தில் பிறந்தவர்; வேதிய குலத்தில் வந்தவர்; பரம தரித்திரராக வாழ்ந்தவர்;

ஆயினும் மனத் திருப்தி எனும் மகிமையான செல்வம் படைத்த சிலர்.

இளமையிலேயே இவர் துறவு பூண்டார்; இமாசல சிகரங்களில் அலைந்து திரிந்தார்; அமெரிக்கா, சீனு, ஜப்பான் முதலிய தேசங்கள் சென்ருர்; அங்கெல்லாம் காளமேகம் போல் பிரசங்கமாரி பொழிந்தார். வேதாந்த ஞானத்தை எங்கும் பரப்பினுர்; கல்மனத்தினரையும் கரைய வைத்தார்; முப்பதாண்டே உயிருடன் திகழ்ந்தார். கடைநாளின் வரவுகண்டு, கங்கா நதியில் ஐக்கியமாஞர். இவரது சரித விவரமும் குணதிசயமும் அடுத்த அதிகாரங்களில் காணப்பெறும்.

## 2. தாயில்லாப் பிள்ளை

பாரத பூமியின் வடமேற்கே பஞ்சநதப் பிரதேசம் இருக்கிறது. அதனை ஆங்கிலத்தில் பஞ்சாப் என்பர். அங்கே முரளிவாலா எனும் கிராமம் ஒன்றுண்டு. அக் கிராமத்திலே ஹீரானந்தர் எனும் வேதியரொருவர் இருந்தார். அவர் துளசிதாஸ் எனும் மகானுடைய பரம்பரையில் வந்தவர்; பரம ஏழை; அங்குள்ள ஹிந்துக்களுக்குக் குலகுரு. 1873-ஆம் ஆண்டிலே அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தையே சுவாமி ராம தீர்த்தர்.

தனயன் பிறந்த சில தினங்களில் தாயார் காலமானாள். தாயில்லாப் பிள்ளையான தீர்த்தரை அத்தையே அன்புடன் வளர்த்து வந்தாள். தாய்ப்பால் இல்லாக் குழந்தைக்கு ஆவின்பாலே ஆகாரம் ஆயிற்று. அன்புடைய அத்தை தீர்த்தரை நாள்தோறும் ஆலயத்துக்கு எடுத்துச் செல்வாள். அங்கே இராமாயண பாரத பாகவதப் பிரசங்கங்கள் நடக்கும். கைக்குழந்தை அப்பிரசங்கத்தை அதிக ஆவலுடன் கேட்கும்; மிக்க ஆனந்தமும் அடையும்; ஆலயத்தில் மணியோசையும் சங்க நாதமும் கேட்டதும் துள்ளிக் குதிக்கும். ஐந்தும் இரண்டும் அறியாக் குழந்தை இப்படி ஆனந்தம் அடைகின்றதே என்று பலரும் ஆச்சரியம் கொள்வர்.

அங்கலட்சணம் நன்கு அறிந்த சோதிடன் ஒருவன், அக் குழந்தையை ஏற இறங்க நோக்கி, "இக் குழந்தை மகா மேதையாக விளங்கும்; அயல்நாடு சென்று ஆரறிவு புகட்டும்; அவனி யெங்கும் அரும்புகழ் பரப்பும்; அந்தோ! முப்பத்து மூன்றும் ஆண்டிலே ஜல கண்டம் எய்தும்" என்று சாற்றினான்.

ஐந்தாம் ஆண்டில் அக் குழந்தையைப் பள்ளியில் வைத்தனர். அங்கே ஓராண்டில் இரண்டு பெரிய பாரசீக காவியங்கள் தீர்த்தருக்கு மனப்பாடம் ஆயின. அது முதல்

முகம்மதிய ஆசிரியர் திகைத்துப்போனர். பத்தாண்டினுக்குள் ஆரம்பப்படிப்பு முடிந்தது. அப்போது தீர்த்தர், “எந்தாய்! என் ஆசிரியர் சிறப்பான செவியுணவு எனக்கு ஈந்து வந்தார். ஆதலின் அவருக்கு நமது கறவைப் பசுவைக் கொடுக்க வேண்டும்” என்று மிகவும் வேண்டிக்கொண்டார்.

முரளிவாலா கிராமத்துக்கு அருகே குஜ்ரன்வாலா எனும் நகரம் ஒன்றுளது. அந்நகர் சென்று ஹைஸ்கூலில் சேர்ந்து ராமதீர்த்தர் படிக்கலானர். அங்கே ஹீரானந்தரின் நண்பர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் தனராம். அவரே நம் தீர்த்தரின் போஷகர் ஆனர். நாளடைவில் அவரையே ராமதீர்த்தர் தமது ஞானசிரியராகக் கொண்டார். பத்தாவது வயதிலேயே தீர்த்தருக்கு விவாகம் ஆகிவிட்டது. ஆடை தரிக்கத் தொடங்கியது முதல், நமது தீர்த்தர் சுத்தக் கதர் ஆடையே தரித்துவந்தார். பதினன்காவது வயதிற்குள் ஹைஸ்கூல் படிப்புத் தீர்ந்தது. பரீட்சையில் இவர் முதல்வராகத் தேறினர். அதனல் உபகாரச் சம்பளம் கிடைத்தது.

அந்த உபகாரச் சம்பளங்கொண்டு கலாசாலையில் சேர்ந்து படிக்க ராம தீர்த்தர் ஆவல் கொண்டார். அதுபற்றி, லாகூர் நகருக்கு

இவர் போக நேர்ந்தது. தீர்த்தர், கலாசாலையில் சேர்ந்து படிப்பதில் தந்தைக்குச் சம்மதம் இல்லை. சாப்பாட்டிற்கே வகை இல்லாமல் இருக்கையில், சம்பளம் கட்டுவது எப்படி என்பதே தந்தையின் கவலை. தீர்த்தரோ அக் கவலையை ஒரு பொருள்படுத்த வில்லை. அதனால் தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. அவர், "அப்பனே! என் சொல்லைத் தட்டி நடக்கின்றாய்; நல்லது; உன் மனைவிக்கு இனி நீயே ஆகாரம் தேடிப் போடவேண்டும்; என்னால் ஆகாது" என்று கூறி, மருமகளைக் கொணர்ந்து மகனிடம் ஒப்படைத்துப் போய் விட்டார்.

## 3. கலாசாலை வாழ்வு

கலாசாலையில் சேர்ந்து வாசித்த காலத்திலே, இவர் பட்ட கஷ்டம் கொஞ்சம் அல்ல. மாத மாதம் சம்பளம் கொடுக்கவேண்டும்; புதிய புத்தகங்கள் வாங்கவேண்டும், மனைவியையும் தம்மையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இவ்வளவுக்கும் தீர்த்தர் என்ன செய்வார்? கருமமே கண்ணாயினார் எத்தகைய இடையூற்றையும் இலட்சியம் செய்யார் அன்றோ? இந்த உண்மை நம் ராம தீர்த்தரிடம் பிரகாசியா நின்றது.

பல சமயங்களில் இவர் பட்டினி கிடந்த துண்டு. பசி காரணமாக உடல் வாடியது. ஆனால் உள்ளம் வாடவில்லை. மனத்தில் திருப்தியும் முகத்தில் விலாசமுமே குடிகொண்டிருந்தன. பட்டினி கிடவாத தினங்களிலே, இவருடைய சாப்பாட்டுச் செலவு, தினம் முக்கால் அணு அல்லது ஓரணுதான். இந்த அற்பத்தொகை கொண்டு காலங்கழிப்பது எங்ஙனம்? "இத் தொகைகூடக் கிட்டாமல் எத்தனையோ ஏழைகள் வாடுகின்றனர்; அவர்களினும் நமது நிலை உயர்ந்தது அல்லவா? மேலும் ஈசன் நமது மனவலியைச் சோதிக்கின்ருன்" என்றே இவர் ஆறுதல் கொண்டு காலந் தள்ளுவார்.

கணித சாஸ்திரத்தில் ராம தீர்த்தர் எம். ஏ., பட்டம்பெற்றவர். கலாசாலையில் வாசிக்கும் தினங்களிலே ஒரு நாள் மிகவும் சிக்கலான கணித நுட்பங்கள் நான்கை இவர் சிந்தியாநின்ருர். கணித நுட்பத்தின் சிக்கலோ விளங்கவில்லை. "பொழுது புலர்வதற்குள் நான்கையும் கண்டறிந்தாக வேண்டும்; இல்லையேல் எனது உயிர் போகவேண்டும்" என்று இவர் சபதம் செய்துகொண்டார். இதற்காக இவர் படுக்கையின் அருகே கூரிய ஈட்டி யொன்றும்

தயாராக இருந்தது. மறுதினம் அருணோதய காலத்திற்குள் மூன்று நுட்பங்கள் விண்டன; மற்றையது விளங்கவில்லை. சூரியோதயம் ஆகுமுன், வீட்டின் மேல்மாடியிலே தீர்த்தர் ஏறிக்கொண்டார்; சொன்ன சொல் தவறக் கூடாது என்று கருதினர்; உடனே ஈட்டியை எடுத்துத் தொண்டையில் குத்திக்கொண்டார். ஈட்டி முனை பாயத் தலைப்பட்டதும், இரத்தம் பீறிட்டது; இரத்தம் பீறிடவே விஷயமும் விண்டது.

ராம தீர்த்தர் 1893-ஆம் ஆண்டில் பி. ஏ., பரீட்சைக்குப் போனர். கணிதத்திலே 13 கேள்விகள் கொடுத்து எவையேனும் ஒன்பது கேள்விகளுக்கு விடைகொடுத்தால் போதும் என்று பரீட்சாதிகாரி சொன்னர். தீர்த்தரோ 13 கேள்விகளுக்கும் சரியான விடை எழுதி, "ஐயா! பதின்மூன்றுக்கும் விடை தந்துளேன். எவையேனும் ஒன்பதைச் சரிபார்த்து மார்க்குத் தரலாம்" என்று எழுதியிருந்தார். ராம தீர்த்தரின் கலாசாலை வாழ்விலே அன்றாட வேலைக்கிரமம் ஈதாகும்:—

அதிகாலையிலே தீர்த்தர் விழித்து எழுவார்; எழுந்ததும் காலை ஏழு மணி வரையில் வாசிப்பார்; பின்பு மலஜலம் கழித்து, தேகாப்

பியாசம் செய்து நீராடுவார்; அப்பால் ஆசிரியரின் வீடுபோவார்; போகும்பொழுது படித்துக்கொண்டே போதல் வழக்கம். ஒரு மணி நேரம் கழிந்ததும், உணவுகொண்டு கலாசாலைக்குச் செல்லுவார். கலாசாலையிலிருந்து திரும்புகையில், அன்பரொருவர் கொடுக்கும் ஆவின் பாலை அருந்துவார். பின்பு வீடு வந்து சிறிது நேரம் தங்கிவிட்டு, இரவி நதிக்கரை சென்று, அரைமணி நேரம் உலாவுவார். அப்பால், நகரில் உள்ள தோட்டங்களின் வழியே வீடு திரும்பி, மேல்மாடியில் உலாவுவார்; உலாவும்பொழுது வாசிக்காமல் இருக்க மாட்டார்; பின்பு ஏழுமணி வரையில் தேகப் பயிற்சி செய்வார்; அதன் பின் உணவு கொண்டு, ஒரு பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார். பிறகு, இரவு பத்துமணி வரையில் படித்துவிட்டு, உறங்கச் செல்லுவார்; கோடைநாளிலும் சரி, மழை நாளிலும் சரி, குடை என்பது இவர் பிடித்துச் சென்றது இல்லை.

கலாசாலையின் தலைவரோ தீர்த்தரின் தேர்ச்சி கண்டு, "லண்டன் சென்று கணிதத்தில் கீர்த்தி பெற்று வா. வேண்டிய பண உதவி தேடித் தருகிறேன்" என்றார். இடையில் மற்

ெருரு மாணவருக்கு அந்த உதவி கிடைத்து விட்டது. அது கேட்டதும் தீர்த்தர் வருந்த வில்லை; ஆனந்தமே அடைந்தார்.

## 4. விற்கவா? வழங்கவா?

இருபதாம் வயதிலே ராமதீர்த்தர் எம். ஏ., பரீட்சையில் தேறினர். கலாசாலையின் தலைவருக்கு இவர் குடும்ப நிலை தெரியும். ஆதலின் அவர் தீர்த்தரை நோக்கி, "ராம! அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்க ஆவல் உண்டா? உண்டாயின், சிபாரிசு செய்வேன்" என்ருர். அதுகேட்டதும், தீர்த்தரின் நெஞ்சம் நைந்தது; நயனங்களில் நீர் பெருகியது. அத்தலைவரை நோக்கி, "ஐயா! விலைக்கு விற்கவா கல்விப் பொருள் தேடினேன்? அப்பொருளை அனைவருக்கும் வழங்கவே விரும்பியுள்ளேன். அரசாங்க ஊழியனுக அமர ஆசையில்லை, ஆசிரியனுக ஊழியம் புரியவே உள்ளம் நாடுகின்றது" என்றுரைத்தார் நம் வீரத்துறவி சுவாமி ராம தீர்த்தர்.

அவ்விதமே தீர்த்தர் லாகூரிலே கணித நூற் பேராசிரியராக அமர்ந்தார். அந்த வேலையிலே கிடைத்த ஊதியத்தின் பெரும் பாகத்தை ஏழைமாணவர் பகிர்ந்துகொண்டனர். வயிற்றுக்கு வகையில்லாத சில மாண

வர்களுக்கோ நாள்தோறும் தீர்த்தரின் செல வில், பாலும் போஜனமும் கிடைத்துவந்தன. பழ மரம் ஊர்நடுவே பழுத்ததுபோல் தீர்த்தர் விளங்கிவந்தார். அந்நாளில் பகவத் கீதை படிப் பதில் இவருக்குப் பேராவல் பிறந்தது. அத னைப் படிக்கப் படிக்க இவரிடம் கிருஷ்ண ஆவே சம் அதிகரிக்கலாயிற்று. நம் வேத சாஸ்திரங் களையும் புராண இதிகாசங்களையும் வாசித்து, வேதாந்த உண்மைகளை உள்ளங்கை நெல்லிக் கனி போல் ராம தீர்த்தர் உணர்ந்துவந்தார். வரவே, இவரிடம் வைராக்கியம் முற்றத் தலைப் பட்டது. உருது, பாரசீகம் போன்ற பாஷை களில் உள்ள இஸ்லாம் மத நூல்களையும் இவர் ஆராய்ந்துவந்தார்.

அச்சமயத்தில் வேதாந்த வீரரும் விழுமிய தேச பக்தருமான விவேகானந்தர் லாகூர் வந் தார். வந்ததும், அவருக்கு நல்வரவு கூறி, அவர் பிரசங்கங்களைப் பலரும் கேட்குமாறு ஏற்பாடு செய்தவர் ராம தீர்த்தரே. விவே கானந்தரையும் அவர் பிரசங்க மாரியையும் கண்டவுடனே, புதியதோர் உணர்ச்சி தீர்த் தருக்குப் பிறந்தது. "நாமும் துறவியாகி அவனியெங்கும் சென்று, வேதாந்த ஞானத் தைப் பரப்பவேண்டும்" என்று தீர்த்தர் உறுதி

பூண்டார். இதற்கு இடையில் தமது படிப்பின் பயனை உலகறியச் செய்யவேண்டி, **ஆனந்தம்** எனும் உருதுப் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார்.

பின்பு 1900-ஆம் ஆண்டிலே பேராசிரிய வேலையை விடுத்து, வானப்பிரஸ்தராகப் புறப் பட்டார் ராம தீர்த்தர். அப்பொழுது சில நண்பர்களும் மனைவி மக்களும் உடன் சென் றனர். கங்கா தீரத்திலே **தேவப்பிரயாகை** எனும் இடத்தில் அனைவரும் தங்கினர். அங்கே, "அனைவரும் தமது கைதனில் உள்ள காசை யெல்லாம் கங்கையில் வீசி எறிந்துவிட வேண் டும்" என்று தீர்த்தர் கூறினர். இரண் டொருவர் சற்றே தயங்கினர். உடனே அவர், "அன்பர்காள்! படைத்த பரமனிடம் நம் பிக்கை இல்லையோ? இல்லையாயின் தடுமாற் றமே நேரும். தடுமாற்றம் கொண்டு தயங்கு வதினும் சாதலே மேலாகும். தெய்வ நம் பிக்கை இல்லாதார் தாரணிக்கு ஒரு பாரமா வர்" என்றார். பின்பு ராம தீர்த்தர் தியா னத்தில் அமர்ந்துவிட்டார். உடன் இருந்த வர்களும் நிஷ்டையில் ஆழ்ந்தனர்.

கங்கை நதிக்கரையில் உள்ள க்ஷேத்திரங் களில் யாத்திரிகருக்கு வசதி தேடித்தரும் பிரபு

ஒருவர் அவ்வழியே வரலானார். அங்கே ராம ரும் பிறரும் நிஷ்டையில் இருப்பது கண்டு, அவர்களுக்கு வேண்டுமளவு உணவுப் பொருள் வழங்குமாறு அவர் திட்டஞ் செய்யலானார். இந்த அதிசயம் நிகழ்ந்ததும், ராமதீர்த்தரின் அன்பர்களுக்குத் தெய்வ நம்பிக்கை பிறந் தோங்கியது.

ஒரு நாள் இரவு, உறக்கத்திலே தீர்த்தர் எழுந்து, ஒருவரும் அறியா வண்ணம் இமய மலை யின் காடுகளில் புகலானார். எங்கும் பேரிருள் சூழ்ந்திருந்தது. வானத்திலே மேகங்கள் குவிந்து மழை பொழிந்தன. பேரிடியும் மின் னலும் கூடிக்கொண்டன. அரையில் இருந்த ஆடையுடன், இவர் நடந்து சென்றார். மழை வெள்ளம் வழி மறித்தது; மலைப்பாறைகளோ வழவழ வென்று இருந்தன. அவற்றையும் சட்டைசெய்யாமல், ஓங்காரத்தை உச்சரித்துக் கொண்டே தீர்த்தர் நடக்கலானார். சில தினங் கள் வரையில் ராமர் திரும்பிவரவில்லை. மனை வியோ மனநோய் கொண்டு கிடந்தனள். சின் னாள் சென்று தீர்த்தர் திரும்பி வந்த பின்பும், மனைவியின் மனநோய் குணமாகவில்லை. முடி வில் மனநோயுடன் உடல் நோயும் கூடிக் கொண்டது. ஆதலின் பத்தினியையும் பிள்ளை

யையும் ஓர் அன்பர் வசம் ஊருக்கு அனுப்பி விட்டார் சுவாமி ராம தீர்த்தர்.

இவ்விதம் ஆறு மாத காலம் வனங்களிலே வசித்த பின்பு 1901-ஆம் ஆண்டின் துவக்கத்திலே துறவுகொள்ள நம் தீர்த்தருக்குத் துணிவு பிறந்தது. உடனே இவர் தமது பூணூலைக் கழற்றிக் கங்கையில் விட்டார். ஓம் ஓம் ஓம் என்று உச்சரித்த வண்ணம் காஷாய உடை பூண்டார்; பின்பு நெடுநேரம் தம்மை மறந்து தியானத்தில் ஆழ்ந்து கிடக்கலானார். பின்னரே, சுவாமி ராம தீர்த்தர் எனும் பெயர் வழங்கலாயிற்று. துறவு கொண்ட வனத்தில் ஆறுமாத காலம் தங்கியிருந்தார் சுவாமிகள். அவசியமாக இருந்தால் அல்லாமல், ஒருவரும் வந்து பார்க்கக்கூடாது என்பது இவர் இட்ட கட்டளை. ஆயினும் பலர் தரிசனத்துக்கு வரவே, ஐந்தாறு மைலுக்கு அப்பாலுள்ள குகை யொன்றினுக்கு இவர் செல்ல நேர்ந்தது. சுவாமிகள் இருந்த இடத்தினருகே, சிங்கம், புலி இவற்றின் குகைகள் மலிந்திருந்தன. அவை நம் தீர்த்தரைப் பார்த்ததும் அஞ்சலி செய்து. அகன்று போய்விடும்.

## 5. தேச சஞ்சாரம்

ஏறக்குறைய ஓர் ஆண்டு இமயமலையின் காடுகளிலே ராம தீர்த்தர் தவம் புரிந்துவந்தார். பின்னர் இப்பெரியார் மலையைவிட்டுக் கீழே இறங்கி வரலானார். அப்போது அடிவாரத்திலுள்ள தகர நாட்டின் மகாராஜா நம் சுவாமிகளைச் சந்திக்க நேர்ந்தது. தெய்வம் இல்லை எனும் கொள்கையில் அவர் மூழ்கிக் கிடந்தவர். ஆயினும் சுவாமிகளுடன் நெடுநேரம் உரையாடி நிற்கவே அவருக்குத் தெய்வ நம்பிக்கை பிறக்கலாயிற்று. உடனே அவர் ராம தீர்த்தரின் பரம சீடராகி, மகா ஞானவான் என்று பலரும் போற்றுமாறு நடந்துவந்தார்.

அப்போது ஜப்பான் தேசத்திலே சர்வமத சங்கம் கூடப்போவதாகத் தெரியவந்தது. சுவாமிகள் அதற்குச் சென்று, வேதாந்த தத்துவத்தை விளக்கவேண்டும் என்று அந்த மகாராஜாவுக்கு ஆசை பிறந்தது. அதன்படி சுவாமிகள் ஜப்பான் தேசம் சென்றார். போகும் வழியிலே சீனு தேசத்தில் உள்ள ஹாங்காங் நகரில் தீர்த்தர் தங்கி, அரிய பிரசங்கமொன்று செய்தார். முடிவில் ஜப்பான் தேசம் சேரவே, அங்கே சர்வமத சங்கம் கூடுவதாயில்லை. அப்போது ஆங்கிருந்த இந்திய மாணவர் சங்கத்தின்

காரியதரிசியாக விளங்கிய பூரணசிங் என்பார் சுவாமிகளை வரவேற்றுத் தொண்டு புரிந்தார். அங்கு, "வெற்றிக்கு மார்க்கமான இரகசியம்" எனும் பிரசங்க மொன்று சுவாமிகள் செய்ய நேர்ந்தது. அதுகேட்டு, ஜப்பானிய மேதாவியர் அனைவரும் இறும்பூது எய்தினர். பலாப் பழத்தில் ஈக்கள் வந்து மொய்ப்பதுபோல் பிரபுக்களும் பெருமக்களும் புலவர்களும் அதிகாரிகளும் சுவாமிகளைச் சூழ்ந்து நின்று, ஞானத் தெளிவு கொண்டனர்.

அப்பால் தீர்த்தர் அமெரிக்கா தேசம் சென்று, அங்கே ஓராண்டினுக்குமேல் தங்கியிருந்தார். அங்கு இவர் நிகழ்த்திய பேருரைகளோ பல. லட்சப் பிரபுக்களும் கோடீசுவரர்களும் சுவாமிகளின் திருவாக்கினைக் கேட்டுத் தெளிவுமிகக் கொண்டார்கள். தங்கள் மாடமாளிகைகளில் வசித்திருக்க வேண்டும் என்று கோடீசுவரர்கள் விரும்பியும், சுவாமிகளுக்கு மலையடிவாரத்தில் மனுஷ சஞ்சாரமற்ற இடத்தில் தங்கியிருக்கவே இச்சை பிறந்தது. தெய்வம் ஏது என்று இறுமாந்திருந்த பலர், ராம தீர்த்தரின் போதங்கேட்டு, ஞானவான்களாயினர். அமெரிக்காவின் பத்திரிகைகள் பலவும், "உயிருள்ள ஏசுநாதர் இதோ இருக்கிறார்."

என்று சுவாமிகளைப் புகழ்ந்து எழுதின. அன்பர்களில் சிலரோ, அப் பத்திரிகைகளின் புகழ்ச்சி உரைகளை எல்லாம் சேகரித்து, நம் சுவாமிகளிடம் சமர்ப்பித்தனர். அப்புகழ்ச்சியுரைகளை ராம தீர்த்தர் கண்ணெடுத்தும் பாராமல், காற்றில் வீசி எறிந்துவிட்டார்.

அமெரிக்கா தேசத்தின் தலைவரும் வந்து சுவாமிகளைத் தரிசித்து ஆனந்தம் அடைந்தார். செல்வச்சீமான்களின் புதல்வியரில் பலரோ தீர்த்தரின் ஞானபோதங் கேட்க அல்லும் பகலும் ஆவலாய் இருந்தனர். அம்மாதரில் ஒருத்தி தனது பெருஞ் செல்வத்தைத் துறந்து, காஷாய உடைபூண்டு, சுவாமிகளின் திருவாக்கை எங்கும் பரப்பி வந்தனள். முடிவில் அம்மாது இந்தியாவுக்கு வந்து, தீர்த்தர் பிறந்த முரளிவாலா எனும் கிராமத்தைத் தரிசித்துக் களிப்பெய்தினள். பின்னர், நம் சுவாமிகள் அமெரிக்காவிலிருந்து திரும்பி, வழியிலே எகிப்தில் தங்கி, அங்கும் சொன்மாரி பொழிந்தார் பாரசீக பாஷையில். அதுகேட்டு, இஸ்லாமிய மத போதகர் பலரும் வியப்பும் களிப்பும் எய்தினர்.

இவ்விதம் இரண்டரை யாண்டு அயல் தேசங்களில் வேதாந்த ஞானக்கொடி தூக்கிய பின், இராம தீர்த்தர் இந்தியாவுக்குத் திரும்பி

வந்தார். அப்போது பற்பல மதத்தினரும் ஜாதியினரும் தீர்த்தரை வரவேற்று ராஜோபசாரம் செய்தனர். பின்பு ராமர் இமயமலையில் வசிப்பதும், கீழே இறங்கி வந்து ஞானம் புகட்டுவதுமாய் இருக்கலானார். வேதவியாசர் தவம்புரிந்த இடத்தை உணர்ந்து, அதே இடத்தில் சுவாமிகள் சமாதியில் இருந்தது குறிப்பிடத்தக்கது. அப்போது சுவாமிகளின் பரமபக்தர்களான **பூரணசிங்கும், நாராயண சுவாமியும்** அவ்வப்போது சென்று சுவாமிகளைத் தரிசித்து வந்தனர்.

1906-ஆம் ஆண்டில் ஒரு நாள், கங்காநதியில் சுவாமிகள் நீராடிக்கொண்டிருந்தார். நீராடுகையில், எதிராறு நீந்துவது இவர் வழக்கம். அவ்விதம் நீந்துகையில் சுழலில் சிக்கிக்கொண்டார்; எனினும் பெருமுயற்சியுடன் நீந்தி அச்சுழலிலிருந்து விடுபட்டார். அதில் அவர் உடலம் களைத்துப்போய் விட்டது. உடனே, கங்கா பவானி தனது வயிற்றகத்தில் சுவாமிகளை அடக்கிக்கொண்டு விட்டனள். அச்செய்தி உணர்ந்து, பூரணசிங்கும் நாராயண சுவாமியும் கடுகிச் சென்று, சுவாமிகளின் ஆசிரமம் சேர்ந்தனர். அங்கே உருது பாஷையில் ஒரு நிருபம் காணப்பட்டது; அதன் சாரம் வருமாறு :—

"சாவே! இந்த உடம்பை எடுத்துச் செல்ல எண்ணுகின்றாய். எடுத்துச் செல். எனக்குச் சிறிதும் கவலை இல்லை. இந்த உடலம் போனால் என்ன? சூரிய கிரணமாய் ஜொலிப்பேன்; சந்திரகாந்தமாய் நிலவுவேன்; காறுறுகளாகவும். மலையருவிகளாகவும் திகழ்வேன்; கருங் கடலின் பேரலைகளில் நின்று தவழ்வேன்; எங்கும் இனிய தென்றல் காற்றாகத் துலங்குவேன்; இந்த வடிவங்கள் பலவும் மாறி மாறி வருவனவாம். பெருமலையிலிருந்து கீழே இறங்கி வந்தேன்; உயிரோடிருந்தும் செத்தார் போன்றிருந்தவர்களை உயர்த்தினேன்; மனமாசில் பட்டுழன்ற பலரைப் பிரகாசிக்கச் செய்தேன்; துக்கநீர் வடித்த பலரை ஆற்றினேன்; எங்கும் திரிந்தேன், யாவுமாய் இருந்தேன்; எனது என்று ஒன்றும் இல்லை. ஓம்! ஓம்!!"

கடைசியாகக் கங்கை நீரில் அமிழும் காலையிலும் ஓம் ஓம் என்றே சுவாமிகள் உச்சரித்துக்கொண் டிருந்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், மனத்துறவு கொண்ட மாசிலாமாணிக்கம் என்றால் சுவாமி இராம தீர்த்தரையே சொல்லவேண்டும்.

## 6. கிருஷ்ண ஆவேசம்

விட்ட குறை, தொட்ட குறை என்பர். முன் பிறவியில் உண்டான பக்குவம் இப் பிறவியில் தீர்த்தரிடம் பரிணமிக்கலாயிற்று. நகம் முளைத்த நாள் முதல், ஆலயம் செல்லுதல், ஆண்டவனைத் தொழுதல், அவன் புகழைச் செவிமடுத்தல் முதலியவற்றில் தீர்த்தர் மூழ்கி இருந்தார். உலகனைத்தும் ஈசுவர மயம் எனும் உண்மை பொங்கி வழியலாயிற்று.

வீதி வழியே செல்லும்பொழுது, யாரைக் கண்டாலும், "அப்பனே! நீ தெய்வ சொரூபம். கேவலம் மனிதன் என்று எண்ணிவிடாதே; விழித்தெழு; தெய்வத் தன்மை, தெய்வ சக்தி பிறக்கும்" என்று இவர் போதிப்பார். கலா சாலையிலே பையன்களை நோக்கி, "அன்பர் காள்! நீங்கள் கிருஷ்ண வடிவம். உங்களுக்கு எல்லாம் தெரியும். தெரியாதது ஒன்றும் இல்லை" என்று உற்சாகம் ஊட்டுவார்.

லாகூர் மிஷன் கலாசாலையிலே இவர் ஓர் ஆசிரியராக இருந்தார். ஒரு தினம் அச் சாலையின் தலைவரை அணுகி, "உங்களைத்தானே. நீங்கள் ஏசுநாதரைத் தொழுகிறீர்களே. கண் கொண்டு அவரைக் கண்டது உண்டா? இல்லை. நீங்கள் கண்டது கிடையாது. இதோ பாருங்கள்.

ஏசுநாதர் உங்கள் முன்னே நிற்கிறார்'' என்று சொன்னார். அது கேட்டு, "இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்று எல்லோரும் நினைக்கலாயினர்.

யாரிடமேனும் நற்குண நற்செயல் கண்டால், வீர தீர விளைவு கண்டால், பரோபகாரச் செயல் கண்டால், "இதுவே தெய்வ குணம், இதுவே வேதாந்தம்'' என்று தீர்த்தர் துள்ளுவார். ஈசுவர வடிவங்களிலே, கிருஷ்ண வடிவத்தில்தான் தீர்த்தருக்குப் பிரேமை மிகுதி. கிருஷ்ண பகவானுடைய குணகணங்களை நாழிக் கணக்காக நவின்றுகொண்டிருத்தல், அல்லது சிந்தனை செய்து நிற்றல் இவர் வழக்கம். கிருஷ்ணன் எனும் பெயரைக் கேட்டதும் இவர் மெய்ம்மறந்துவிடுவார்.

ஒரு சமயம் இரவி நதிக்கரையில் உலாவி நின்றார். வானத்திலே கரிய மேகங்கள் குவிந்து கிடந்தன. மேகங்களைக் கண்டதும் இவர், "இதோ கிருஷ்ணன் இருக்கிறான். கிருஷ்ணா! கரிய நிறக் கண்ணா! மேகத்தின் நிறங் கண்டு எனக்குப் பித்தம் உண்டாகின்றது. நீ ஏன் இம்மேகத்தில் மறைந்து கிடக்கின்றாய்? மேகமே! நீதான் எனக்கு உரையாயோ? நீயே வானத்திலே மிக உயரத்தில் அலைந்து திரிகின்றாய்; ஆதலின், அவனை நன்கு காணமுடியும். கிருஷ்-

னன் எங்கே? கிருபையுடன் உரைப்பாயாக. மேகமே! நீ கறுத்துவிட்டாய்; ஏன்? கிருஷ்ண னுடைய பிரிவு கண்டு நீ சகிக்கவில்லை. நான் அவனைக் காணமுடியாதா? அவனையன்றி யாரி டம் என் உள்ளத்தை ஒப்படைப்பேன்? எனது உற்றார் உறவினரைக் கைவிட்டேன். மானபி மானத்தையும் எண்ணிலேன்" என்று கதறினர்.

சின்னேரத்திற்கெல்லாம் மேகங்கள் பிரிந் துபோகலாயின. அது கண்டதும், "சோதர மேகமே! போகிறாயா? போ, ஆனால் என் தவிப் பைக் கிருஷ்ணனிடம் சொல்லத் தவறாதே; நான் கண்ணீர் வடிப்பதையும் அக்கண்ணனி டம் உரையாமல் இராதே. விரைவில் வந்து என்னைக் காணும் வண்ணம் அவனுக்கு இசைப் பாயாக. வாழ்வே! எத்தனை நாளைக்கு இத் தொல்லை! ஒன்று எனது கிருஷ்ண ஆவேசத் தைத் தணி; அல்லது என்னைக் கொண்டு போய் விடு" என்று சொல்லிக்கொண்டே இராம தீர்த்தர் மூர்ச்சைகொண்டார்.

ஒரு சமயம் பண்டித ரொருவர் இராமாய ணம் சொல்லிக்கொண் டிருந்தார். இராம மகிமை காதில் பட்டதும், தீர்த்தருக்கு ஆனந்த அழுகை தோன்றிவிட்டது. உடனே இவர் தேம் பித் தேம்பி அழத்தொடங்கினர். அதுகண்ட பண்டிதர் இராமாயணத்தை மூடிவிட நேர்ந்

தது. "கண்காள்! கிருஷ்ணனைக் காணுவிட்டால், நீங்கள் மூடிக்கிடப்பதே மேல்; கைகாள்! அவன் பாதத்தை வருடும் பாக்கியம் படையாவிடின், இருந்து என்ன பயன்; இல்லாது போதலே மேலாம். ஈசா! எனக்கு உயிர் அளித்தாய். உன்னைக்காணின் உனக்கே இந்த உயிரை ஒப் படைப்பேன்" என்று கூறி மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தார் இராமர்.

அவ்விதம் கண்ணீர் வடித்ததும், தம்மை மறந்து தீர்த்தர் தரையில் சாய்ந்தார். நெடு நேரம் வரையில் கண் திறக்கவில்லை, கை கால் களும் அசையவில்லை. நீண்ட நாழிகை ஆன தும் கண் மலர்ந்தது; நினைவும் வந்தது. இவர் முன்னே மாநாகமொன்று படமெடுத்துக் கொண்டு சீறிற்று. உடனே இவர், "கிருஷ்ணு! வருக; இவ்வடிவுடன் எனக்குத் தரிசனம் தர வந்துள்ளாய். என் பாக்கியமே பாக்கியம். ஆயி னும், கோபிகைகள் எல்லோரும் எந்த வடிவம் கண்டு உன்மீது காதல் கொண்டனரோ அந்த வடிவமே காண நான் ஆவல் கொண்டுளேன்" என்று துதித்தார். அந்நிலையில் அன்பரொரு வர் தீர்த்தரை அணுகி, "சுவாமீ! கிருஷ்ணன் உங்களுக்குள்ளே இருக்கிறார். வெளியில் அவ ரைத் தேடுவது ஏன்?" என்றார். உடனே ராம தீர்த்தர், "நல்லது! எனக்குள்ளே கிருஷ்ணன்

இருக்கிறானோ?" என்று கூறித் தமது மேல் சட்டையைக் கிழித்து எறிந்தார்; பின்பு நகங் கொண்டு, மார்பைக் கீறிப் பார்க்கவும் முயன் றார்; அப்பால் நெடுநேரம் நினைவற்று நிலத்தில் கிடக்கலானார். இவ்விதம் தீர்த்தர் ஆவேசம் கொண்ட தருணம் ஒன்று இரண்டன்று.

ஒரு தினம் தீர்த்தர் நீராடிக்கொண் டிருந் தார். அப்போது அன்பரொருவர் இவரைக் காண வந்தார். அவரைக் கண்டதும், "அன்ப, என்ன சொல்வேன்! இப்பொழுது கிருஷ்ணன் இங்கே வந்தான், என் கண் முன்னே நின்றான்! பாதாதிகேசம் முதல் அப் பெருமானைக் கண்டு களித்தேன். பின்னர் அவன் மறைந்து போயி னன். எனது மனப்புண்ணையும் கண்ணீர்ப் பெருக்கையும் ஆற்ற அவனுக்கு இன்னும் மனம் வரவில்லை போலும்!" என்று புகன்று பொருமினார்.

இவ்விதம் இராமதீர்த்தர் கிருஷ்ண ஆவே சம் கொண்டு உழலுகையில், லாகூரிலே சிலர் 'இவன் பித்தன்' என்று இலேசாகப் பேசினர். அப்போது டாக்டர் முகம்மது இக்பால் என்பார், (இவர் முகம்மதிய மேதாவி) "என்னே! பலரும் இப்பெரியாரைப் பித்தன் என்கின்றனர். இப் பெரியார் பித்தர் ஆனால், உலகிலே ஞானம்

உள்ள நபர்களைக் காண்பது அரிது" என்று பரிவுடன் பேசலானார்.

## 7. முகவிலாசம்

சுவாமி ராம தீர்த்தரின் முகவிலாசம் மொழியுந் தரத்த தன்று. இப் பெரியாரின் கண்ணில் கருணை ததும்பும்; பார்வையில் பிரியம் சொட்டும்; பேச்சில் போதம் பிரகாசிக்கும். இவரைக் காத்திருந்தால் கலிதீருமெனக் காத்திருந்தோர் பலராவர்; பார்த்திருந்தால் பசி அகலும் என்று பார்த்திருந்தோரும் பலரே; பக்கத்தில் வீற்றிருந்தால் வினை தொலையும் என்று வீற்றிருந்தோரும் எண்ணிலர்.

ஆத்மஞானம் பரப்பவேண்டும் என்று ராம தீர்த்தர் அமெரிக்கா போனார். வழியிலே ஜப்பான் தேசத்தில் இவர் தங்கியிருக்க நேர்ந்தது. ஆங்கிருந்த கோடீசுவரர் ஒருவர் தீர்த்தருடன் சிறிது நேரம் பேசியிருந்தார். இடையிலே திடீரென்று அவர் எழுந்து போய்விட்டார். பின்பு, சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் தமது மனைவி மக்களுடன் வந்து சுவாமிகளை வணங்கி, "என் ஐயனே! மன்னிக்க வேண்டும், தங்கள் பார்வையினால் என் சித்தம் குளிர்கின்றது; பேச்சினாலோ என் செவி மகிழ்ச்சி கொள்கின்றது. இந்த ஆனந்தத்தை நான் மட்டுமா

அனுபவிப்பது? உடன் இருந்து அனுபவித்து உள்ளம் பூரிக்கவே, என் மனைவி மக்களை அழைத்து வந்தேன்'' என்று கூறி மகிழ்ந்தார்.

ஜப்பானைவிட்டு ஒரு கப்பலிலே நம் தீர்த்தர் அமெரிக்கா சென்றார். கப்பலின் மேல் தட்டிலே உல்லாசமாகக் காலம் கழிப்பது வழக்கம். அதே கப்பலில் ஓர் அமெரிக்கச் சீமானும் பிரயாணம் செய்தார். அப்போது ராம தீர்த்தருக்கும் அவருக்கும் நடந்த பேச்சு இது:—

"ஐயா! தங்கள் மூட்டைகள் எங்கே?"

"உடம்பைத் தவிர மூட்டை முடிச்சு ஏது?"

"பணத்தை எங்கே வைத்துக்கொள்வீர்?"

"பணம் என்பது என்னிடம் இராது."

"பின், எப்படிக் காலந்தள்ள முடியும்?"

"அனைவரையும் நேசித்து நான் காலந் தள்ளுகிறேன். தாகம் எடுப்பின், உடனே ஒருவர் தண்ணீருடன் காத்திருப்பார்; பசி எடுத்தால், ஒருவர் ஆகாரம் கொண்டுவந்து கொடுப்பார்."

"அமெரிக்காவில் தங்களுக்கு அன்பர்கள் யாரேனும் உண்டா?"

"ஆம், உண்டு; ஓர் அமெரிக்கரை எனக்குத் தெரியும்; அவர்தான் நீர்'' என்று தீர்த்தர் கூறி, அவர் தோள்மீது கை வைத்தார். உடனே அந்த அமெரிக்கருக்கு உச்சி குளிர்ந்தது; மயிர்

சிலிர்த்தது, உள்ளம் பூரித்தது. பின்னுளிலே ராமரைக் குறித்து அவர் உரைத்தது இது:—

"இப்பெரியவர் ஞானசொரூபி. கொடுந்தீயும் இவரைச் சுடாது; கூரிய ஆயுதமும் இவரைக் கண்டு மழுங்கிப்போம். இவர் கண்களில் சதா ஆனந்தபாஷ்பம் பெருகா நிற்கும், இவரைப் பார்த்த வளவில் யாவருக்கும் புத்துயிர் பிறக்கும்; பரமானந்தம் உதிக்கும்."

தீர்த்தர் அமெரிக்கா சேர்ந்தார். அங்கே ஒரு ரயிலில் இவருக்கு டிக்கட் வாங்கித்தர ஒரு மாது கருதினள். ரயிலின் தலைவர் அது கண்டு, "சோதரீ! இப் பெரியாருக்கா டிக்கட் வாங்கப் போகின்ருய்? வேண்டாம். டிக்கட் இல்லாமல் இவர் எங்கு வேண்டுமாளுலும் பிரயாணம் செய்யட்டும். இவரது புன்னகை கண்டு என் உடம்பு பூரிக்கின்றது" என்று கனிவுடன் கூறினர்.

அமெரிக்காவில் தீர்த்தர் பிரசங்கமாரி பொழிந்தார். அதனைச் செவிமடுத்த மாதொருத்தி தீர்த்தரைத் தனியே காணச் சென்றனள்; சென்றதும், தனது குடும்ப நிலையை உரைத்து, இரத்தக் கண்ணீர் வடித்தனள். அப்போது தீர்த்தர் கண்ணிறுக மூடிக் கடவுளைக் கருத்தில் இருத்தி இருந்தார். மாது அதுகண்டு, "என்னே, இவரிடம் கருணை என்பது கடுகளவும் இல்லை; பெண் என்ருல் பேயும் இரங்கும்; என் பாட்

டைச் சொல்லி நான் பரிதபிக்கின்றேன்; இவர் கண்மூடி மௌனியாக இருக்கின்றாரே'' என்று தன்னுள்ளே கலங்கினள்.

உடனே சுவாமிகள் கண் மலர்ந்து, "அன்னாய்!'' என்று அழைத்து, ஓம் ஓம் என்று உரைத்தார். அவ்வளவில், அம்மாது, "என் சொல்வேன் இப்பெரியாரின் திருஷ்டி விசேஷத்தை! எனக்கோ அதிசயமான புத்துணர்ச்சி உதித்துளது. மண்ணுலகில் இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. வான வீதியில் சஞ்சரிப்பதாகவே எண்ணுகின்றேன். உலகனைத்தும் எனது தேசம், எல்லோரும் எனது மக்கள், எனும் உணர்ச்சி என்னிடம் பெருகா நிற்கின்றது. இப்பெரியவர் பிறந்த பாரத பூமியை நான் தரிசிக்கவேண்டும். அன்னாய் என்று இவர் அழைத்ததன் அருமையே அருமை. அந்த அருமையை நான் மட்டுமே உணர இயலும். எனது மனமாசு நீங்கிவிட்டது; சித்தசுத்தி பிறந்துளது'' என்று கூறி ஆனந்தம் அடைந்தனள்.

நடன சிங்கார மாதொருத்தி, மலைபோல் செல்வம் குவித்தவள், பட்டும் பீதாம்பரமும் நவரத்தினமும் அணிந்தவள், ஒரு சமயம் சுவாமி ராமதீர்த்தரைக் காண வந்தனள். அவள் உடம்பில் பூசியிருந்த வாசனையோ காதவழி தூரம் கமழ்ந்தது. அந்த இளமங்கையின் வருகை

கண்டு, அனைவரும் பிரமித்து நின்றனர். தீர்த்தரைக் கண்டதும், தரையிலே அவள் தொப்பென வீழ்ந்து வணங்கினாள்; பின்பு, "சுவாமிகளே! எனக்கு நிம்மதி இல்லை, அமைதியும் ஆனந்தமும் ஊட்டி என்னை ஆதரிக்க வேண்டும். எனது முத்து, பவழம், வச்சிரம், வைடூரியம் இவை எம்மாத்திரம்? யாவர் மனத்தையும் கவரும் எனது மந்தகாசமும் கிடக்கட்டும்; இவை எல்லாம் வெளி வேஷம். எனது உள்ளமோ சதா சலித்துக் கொண்டே இருக்கின்றது. நான் கடைத்தேறும் வழிகாட்டிக் கடைக்கணிக்க வேண்டும்" என்று இரந்தனள். உடனே ராமர் அம்மாதை நோக்கினார். அவள், "ஐயனே! கண்டேன், கதி கொண்டேன்" என்று களிப்புடன் கூறினள்.

மற்றொரு மாது, பெரும் பணம் படைத்தவள், ஒரே பிள்ளையை, அருமைப் பிள்ளையை இழந்து தவித்தனள்; தீர்த்தரைக் கண்டு கவலை நீங்கலாம் என்று அவள் எண்ணி வந்தாள். சுவாமிகள் அப் பெண்ணை நோக்கி, "மாதே! சந்தோஷத்தை விலைக்கு வாங்க வந்திருக்கின்றாய்! நல்லது. ஏற்ற விலை தரவேண்டுமே" என்றார். "என்ன விலை வேண்டுமானாலும் தருவேன்" என்றாள் அம்மாது. "சந்தோஷ ராஜ்யத்தில் வழங்கும் நாணயம் வேறு விதமாக

இருக்குமே" என்று இசைத்தார் தீர்த்தர். "எதுவாக இருந்தால் என்ன?" என்று அவள் பதில் சொல்லினள். "நல்லது. புத்திரசோகம் அல்லவா உன்னை வாட்டுகின்றது? அந்த நீக்ரோ பையனை சுவீகாரம் செய்துகொள், பெற்ற பிள்ளையைப்போல் அவனைப் போஷித்து வா. இதுதான் விலை" என்றார் சுவாமிகள். "அது முடியாத காரியம்" என்று அவள் கூறினாள். "அப்படியானால் சந்தோஷம் அடைவதும் கஷ்டந்தான்" என்றார் தீர்த்தர்.

நீக்ரோ மக்களைக் கண்டவிடத்தில் சித்திரவதை செய்தல் சில அமெரிக்கருடைய கொள்கை. எனவே நீக்ரோ பையனைப் பிள்ளையாகப் பாவித்தல் இலகுவாமோ? எனினும், முடிவில் அம்மாது தீர்த்தரின் யோசனைப்படி நடந்து, அளவிலா ஆனந்தம் எய்தினள்.

## 8. மெய்ஞ்ஞான தீபம்

**காதற்ற ஊசியும் கடைநாளிலே துணை வாராதுகாண்**

என்றார் பட்டினத்தார். பணத்தில் புரண்டுகொண்டிருந்த அமெரிக்க ஸ்திரீ ஒருத்திக்கு ராம தீர்த்தர் கூறிய ஞானம் இது:—

ஆண்டவனைக் காண ஆவலாய் இருக்கின்றாய். அது நல்ல ஆவல்தான். உனது மனம் எனும் வீடு நிர்மலமாக இருத்தல் வேண்டும்; அடையா

நெடுங்கதவும் அஞ்சல் அஞ்சல் என்ற சொல்லுங் கொண்டு நடப்பாயாக. மேலும் உனது வீட்டு வாயில்கள் அனைத்தையும் விரியத் திறந்து விடு; செல்வம் அனைத்தையும் ஏழை எளியவர் அள்ளிக்கொண்டு ஆனந்தம் அடைவர்; அது கண்டதும், வீட்டை விட்டு வெளியே கிளம்பு, ஆண்டவன் உன் கண்ணெதிரே தோன்றுவான்.''

உடம்பில் உத்தமனை அறி என்பது ஔவை வாக்கு. தன்னைத்தான் அறியின், தணியாத இன்பம் பிறக்கும். இந்த உண்மையை விளக்க நமது தீர்த்தர் திருவாய் மலர்ந்த கதை இது:—

“நான்கு பக்கமும் நிலைக்கண்ணாடி பதித்த ஒரு கூண்டின் நடுவே நன்கு மலர்ந்த ரோஜா ஒன்று இருந்தது. அக் கூண்டினுள்ளே குயிலொன்றை அடைத்து வைத்தனர். எந்தப் பக்கம் பார்த்தாலும் நிலைக் கண்ணாடியிலே ரோஜாமலர் தென்படும் அல்லவா? உடனே அப்பறவை இப்பக்கமும் அப்பக்கமும் ஓடி ஓடி அம்மலரைக் கொத்த முயன்றது. முயன்றும் என்ன? மலரைக் கொத்த முடியவில்லை; மற்று, அலகில் காயம்பட்டு அது கீழே வீழ்ந்தது. முடிவில் அக்குயில் நிலைக்கண்ணாடியை நோக்காமல் கூண்டின் நடுவே நோக்கியது. நோக்கவே ரோஜாமலர் தென்பட்டது. மானிடனே! நிலைக்

கண்ணாடி போன்றது இந்த உலகம். உலகப் பரப்பிலே நீ அடைய விரும்பும் ஆனந்தம் உனக்கு உள்ளேயே உளது. இதனை நன்கு உணர்ந்துகொள்; நலம் பெறலாம்."

ஆண்டவன் ஒருவனே; ஞானிகளுக்கு அவனே எல்லாமாய் விளங்குவான் என்பதற்கு நம் ராமர் அருளிய கதை வருமாறு:—

"ஒரு பக்கிரியிடம் போர்வை ஒன்று இருந்தது. அதனை ஒரு கள்வன் அபகரித்துச் சென்றனன். உடனே போலீஸாரிடம் அப் பக்கிரி சென்று, 'ஐயா எனது மெத்தை, தலையணை, குடை, கால்சட்டை, மேல்சட்டை முதலியன எல்லாம் களவு போயின' என்று முறையிட்டான். திருடன் அது உணர்ந்து போலீஸாரை யணுகி, 'ஐயா! இந்தப் போர்வை ஒன்றுதான் களவு போயிற்று. இப்படியிருக்க என்ன என்னவோ களவு போனதாக இவன் உரைக்கின்றானே' என்று கோபத்துடன் கூறினன். பக்கிரியோ போர்வையை எடுத்துக் கொண்டு விரைந்து நடக்கத் தலைப்பட்டான். பொய்ப்பிராது கொடுத்த பக்கிரிமீது எரிந்து விழ அதிகாரி கருதினன். உடனே பக்கிரி, 'ஐயா! கோபம் வேண்டாம். இந்த ஒரு போர்வையே எனக்கு மெத்தையாய், தலையணையாய், குடையாய், மேல்சட்டையாய், கால்சட்டையாய்,

எல்லாமுமாய் உபயோகப்படும்' என்று நிரூபித்துக் காட்டினன்''

## 9. குணதிசயம்

சுவாமி ராம தீர்த்தர் தம்மை ராமபாதுஷா அல்லது ராமராஜா என்று அழைத்துக் கொள்வது வழக்கம். ஒரு சமயம் இவர் மேனாடு சென்று திரும்பி வந்துகொண்டிருந்தார். எகிப்து தேசத்திலுள்ள போர்ட்டு ஸெட் எனும் துறைமுகத்தில் கப்பல் வந்து தங்கியது. அப்பொழுது இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாக இருந்த லார்டு கர்ஸன் என்பவரும் அதே கப்பலில் பிரயாணம் செய்தார். இது விஷயம் தீர்த்தருக்கு எட்டியது. உடனே தீர்த்தர், "ஒரே கப்பலில் இரண்டு அரசர் பிரயாணம் செய்ய முடியாது" என்று சொன்னார்; அப்பால் மறு கப்பலில் ஏறியே இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார்.

ஆங்கிலத்தில் அரைகுறையான அறிவு பெற்றவர்களில் பலரும் நகத்தில் அழுக்குப் படக்கூடாது, சரீரப் பிரயாசையான வேலை செய்யோம் என்பர். அமெரிக்காவிலே டாக்டர் ஹில்லர் என்பவரின் வீட்டில் சுவாமிகள் தங்கி இருந்தார். அப்போது தீர்த்தர் திடீரென்று காடு சென்று, டாக்டர் ஹில்லருக்கு

விறகு வெட்டிக்கொண்டு தமது தலையில் சுமந்து வருவது வழக்கம்.

கலாசாலையில் படித்த காலத்திலே ராமர் பல சமயம் பட்டினி கிடந்தது உண்டு; படிப்பு நீங்கியதும், எலும்பும் தோலுமாகவே காணப் பட்டார். "இவர் உடம்பில் உயிர் ஊசலாடிக் கொண்டு இருக்கிறது; எந்த நிமிஷம் பிரிந்து போமோ?" என்று அனைவரும் கவலை கொண் டனர். அத்தகைய சரீரம் வாய்ந்தவர் பின் னிலே இமயமலையில் யாவரும் ஏறமுடியாத சிகரங்களில் இலகுவாக ஏறினர்; நாளொன் றுக்கு இருபது அல்லது முப்பது மைல் வீதம் நடந்தார். அமெரிக்காவிலே போர்வீரருக் குள் ஓட்டப் பந்தயம் நடந்தது. அதில் சுவாமி ராம தீர்த்தரும் கலந்துகொண்டார். நாற்பது மைல் தூரம் ஓடிவருவது என்பது பந்தய நிபந் தனை. அதில் ஒருவர் வெற்றி பெற்றார். அவ ருக்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே தீர்த்தர் திரும்பிவந்து பலருக்கும் ஆச்சரியம் விளைத்தார்.

லாகூரிலே அருங்கோடையில் வீதி வழியே ராமர் நடந்து செல்லுவார். தீர்த்தர் பாத ரட்சை தரிப்பதில்லை. கடுவெயிலில் நடக்கும் காலையில் இவர் பாதத்தைத் தொட்டால், ஜில் என்று குளிர்ந்திருக்கும். ஈதென்ன அதிசயம்.

என்று ஓர் அன்பர் கேட்டார். அதற்கு ராமர், உஷ்ணம் மிகுந்த லாகூரின் வீதியில் நான் நடக்கவில்லை; மற்று, தேவாமுதம் போன்ற நீர் தங்கிய கங்கையிலேயே நடந்து செல்லுகின்றேன். வெண்ணிற அலைகள் என் காலடிகளில் வந்து வீசுகின்றன! எங்கும் கங்கை பாய்வதை நீங்கள் அறியீரோ?" என்பார்.

தனராம் என்பார் நம் சுவாமிகளுக்கு இள வயதிலே போஷகராகவும் ஞானுசிரியராகவும் வாய்த்தார். அவருக்கு ராமதீர்த்தர் எழுதியுள்ள கடிதம் ஓர் ஆயிரத்துக்கு மேலாகும். அவை ஒவ்வொன்றிலும் குருபக்தி, வேதாந்த உண்மை இவை சொட்டும். அக் கடிதங்கள் எல்லாம் **இராமபத்திரம்** எனும் பெயருடன் ஒரு நூலாக வெளியாகியுள. கங்காதேவி அழைத்துக்கொள்ளும் நிமிஷம் வரையில் நம் தீர்த்தர் அந்த ஞானுசிரியனை மறக்கவில்லை. ஈசன் பாதம் சேர்வதற்குச் சிறிது முன்பாக நம் தீர்த்தர், ஓர் அன்பரை நோக்கி, "அன்ப! நம் தனராம் தள்ளாத வயதில் கைதனிலே காசின்றி வருந்துகின்றார். அவருக்குக் கொஞ்சம் பணம் அனுப்பினல் நலமாயிருக்கும்" என்று உரைத்தார்.

"மகதேவ! மலர்பறித்து உனக்கு மாலை சூட்டேன்; மலர் பறித்தால் அச்செடி நோகும்

அன்றோ? என் மனமலரையே உனக்குச் சாத்துவேன்" என்று **தாயுமானவர்** கூறியுள்ளார். சுவாமி ராம தீர்த்தர் ஒரு சமயம் இமய மலையிலே மனித சஞ்சாரம் இல்லாத சிகரம் ஒன்றில் சேர்ந்தார். அங்கே பூமியில் பலவகையான மலர்கள் எங்கும் உதிர்ந்து கிடந்தன. அது கண்டு, "இந்த இடம் தேவர்களின் பூஞ்சோலை; மனமாசு கொண்ட மானிடர் இங்கு வருதல் கூடாது; வரின் இயற்கை அழகு மாசுபடும். இந்த இடத்தில் மிகவும் ஜாக்கிரதையாக நடத்தல்வேண்டும். தப்பித்தவறி மலரொன்றில் காலை வைத்துவிடின், மந்தகாசம் வாய்ந்த மலர் வாடிப்போம்" என்று தீர்த்தர் பேசியுள்ளார்.

இவர் கலாசாலையை விட்டு ஆசிரிய வேலையில் அமர்ந்தவுடன், கைச் செலவுக்குக் கொஞ்சம் பணம் வேண்டியிருந்தது. தீர்த்தர் அதுபற்றி ஒருவரிடம் பத்து ரூபா கடன் வாங்கினார். காலத்தில் செய்த நன்றியை ஞாலத்தினும் பெரிதாக ராமர் எண்ணுவார். அதுபற்றி, பலமாதங்கள் வரையில் மாதம் 10 ரூபா வீதம் தீர்த்தர் கொடுத்துவந்தார்.

ஜப்பான் தேசத்திலே தங்கியிருந்த பொழுது தீர்த்தரின் முகவிலாசத்தையும் சொல்லழகையும் இனிமையையும் கண்டு, சீமான்

களின் புதல்விகளான கட்டழகியர் பலர், "இப் பெருமானைக் கணவனாக அடையின் உடல் எடுத்த பயன் எய்தலாம்" என்று நாடி நின் றனர். உலகனைத்தையும் துறந்த மகா துற வியரில் பலர் அரம்பை, மேனகை களின் அழகில் ஈடுபட்டு அறிவை இழந்து தவத்தைச் சிந்தினர் என்று புராணங்கள் கூறும். ராமதீர்த்தரை அம்மாதரின் மயக்கு அணுகவில்லை.

## 10. மனத்துறவு

குடும்ப நலத்தை, உலக சுகத்தை ஒருவன் துறத்தல் எளிது அன்று. மகா ஞானியான வேதவியா சர், சுகர் எனும் புதல்வனை அடைந்தார். பிறந்தவுடனே, தந்தையை விட்டுத் தனியே சென்றார் சுகர். புத்திரபாசம் வேதவியாச ரைப் பிடித்தாட்டியது. உடனே அப்பெரி யார், 'சுக சுக' என்று கூவிக்கொண்டே புதல் வனைப் பின்தொடர்ந்தார் என்று புராணங்கள் கூறும். ஆதலின், "கடந்த மாந்தரும் கடப் பரோ மக்கள்மேற் காதல்" என்றார் ஒரு பெரி யார். நமது ராமதீர்த்தரின் துறவு எத்தன் மையது என்று பார்ப்போம்.

குழந்தைப் பருவம் முதலே ராமதீர்த்த ருக்கு மனத்துறவு ஏற்படலாயிற்று. கலா

சாலையில் வாசித்துவந்த காலையிலே, இவர் கையில் காசு இல்லை; கடன் கொடுப்பாரும் இல்லை. பசி வந்து வாட்டியது. இரண்டு மாத மாகக் கலாசாலைக்கு உரிய சம்பளம் கொடுக்க வில்லை. ஒருநாள் கலாசாலைத் தலைவர் ராம தீர்த்தரை அழைத்தார். விரைந்து சென்று தலைவரை வணங்கி நின்றார் தீர்த்தர். உடனே தலைவர் பொட்டணம் ஒன்று கொடுத்தார். இதற்குள் மணி அடித்துவிட்டது. நேரம் தவறாமல் வகுப்புக்குச் செல்ல வேண்டும். பொட்டணத்தில் என்ன இருக்கிறது என்று பாராமலேயே தீர்த்தர் தமது வகுப்பிற்குச் சென்றுவிட்டார். மூன்று மணி நேரம் வரையில் பொட்டணத்தை அவிழ்த்துப் பார்க்கவில்லை. அப்பால் பிரித்துப் பார்க்கையில், முப்பது ரூபா இருந்தது. அச்சமயம் தீர்த்தருக்குத் தேவை யான தொகை ரூபா பத்தே. உடனே தீர்த்தர் விரைந்து சென்று தலைவரை அடைந்து, "ஐயா! வந்தனம். எனக்குத் தேவை ரூபா பத்தே. பாக்கி ரூபா இருபதை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

தனராம் என்பவர் தீர்த்தரின் ஞானாசிரியர். அவருக்கு ஒருசமயம் தீர்த்தர் எழுதிய கடித் சாரம் இது:— "யான் தங்கள் அடிமை. எனது என்று ஒன்றும் கிடையாது; உலக சுகத்தைத்

MARAIMALAI ADIGAL LIBRARY
61950

தேடி அடைதலோ, செல்வத்தை நாடி நிற்றலோ எனக்கு ஆனந்தம் ஊட்டாது. மனைவி மக்களுக்கு ஆடையணிகள் வாங்குவதையும் நான் இன்பமாகக் கொள்ளேன். மரநிழலையே வீடாகக் கொள்வேன்; நெற்றியில் நீறுபூசிக் கொள்வதையே அணியாகக் கருதுவேன்; வெறுந் தரையையே மலர் அமளியாக மதிப்பேன்; பசிவாதை வரின் இரண்டொரு வீட்டில் பிச்சை எடுப்பதையே பரமான்னமாக எண்ணுவேன். இவையே எனக்கு ஆனந்தம் அளிக்கும். ஆண்டியாகப் போய்விட ஆணை தாருங்கள். இக்கணம் முதல் அவ்விதமே நடக்கத் துணிவேன். எனக்கு ஏதேனும் கிடைப்பின், அதனைக் காணிக்கையாகத் தங்கள் பாதகமலங்களில் அர்ப்பணம் செய்வேன். நானோ ஓர் அடிமை. எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு உகப்பாக என் மனக்கோயிலை அமைப்பதே எனது கடமை. மன அமைதியை மிஞ்சிய தனம் ஒன்று உண்டோ? கலாசாலையில் எனக்குக் கிடைக்கும் சம்பளம் தங்களைச் சார்ந்தது."

முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒரு பொருளைத் தப்பாமல் சாரவேண்டும் என்றாள் ஔவை. அவ்விதம் முப்பதாம் ஆண்டுக்கு முன்னமேயே மனத்துறவு கொண்டு, மனைவி

மக்களை மறந்து, காஷாய உடைபூண்டு ராம தீர்த்தர் ஜப்பான் தேசம் சேர்ந்தார். ஆங் கிருந்த லட்சப் பிரபு ஒருவருக்குத் தீர்த்தரின் துறவு கண்டு திகைப்பு உண்டாயிற்று. "குடும் பத்தைத் துறந்து வந்த காரணம் யாது?" என்று லட்சப் பிரபு வினவினர். அதற்கு, "ஒரு சிறிய குடும்பம் கொண்டு வாழ நான் விரும்பவில்லை; உலகு அனைத்தையுமே எனது குடும்பமாகக் கொண்டு, மானிட கோடிகளின் சுக துக்கங்களில் கலந்து கொள்ளவே, இவ் விதம் துறவு பூண்டேன்" என்றார் ராம தீர்த்தர்.

அமெரிக்கா தேசம் சென்று, அங்கே வேதாந்த ஞானம் பரப்பிய பின், ராம தீர்த் தர் இந்தியாவுக்குத் திரும்பினர். திரும்பியதும் தீர்த்தரை ஒரு கொடு நோய் பற்றிக்கொண் டது. ஒருமாத காலம் இவர் படுத்த படுக்கை யாக இருந்தார். ஒரு தினம் இவர் மனைவியும் ஆறு வயதுக் குழந்தையும் சிறிய தாயும் தரி சனஞ் செய்ய வந்தனர். அப்போது சுவாமி களுடன் இருந்து தொண்டு புரிந்தவர் பூரணசிங் எனும் அன்பர். ராம தீர்த்தரின் குடும்பமோ பரம தரித்திர நிலையில் இருந்தது. அக் குடும் பத்தார் வயிற்றை ஒடுக்கி, வாயை ஒடுக்கி, அரும்பாடுபட்டு ஓரளவு காசு சேர்த்து, பஞ்சா

பிலிருந்து ஹரித்துவாரம் வந்துசேர்ந்தனர் ரயில் மார்க்கமாக.

பூரணசிங் என்பார் சுவாமியை அணுகி, மூவரின் வருகையை அறிவித்தார். உடனே தீர்த்தரின் கன்னம் சிவந்தது; பூரண சிங்கை விறைத்து நோக்கினார் தீர்த்தர். சுமுகமான பதில் கிடைக்கும் என்று பூரணர் எதிர்பார்த்தார். அப்போது சுவாமிகள், "பூரண! உம்மிடம் ஏதேனும் பணம் இருக்கிறதா?" என்றார். "ஆம், இருக்கிறது; எவ்வளவு தொகை வேண்டுமானாலும் சேகரிக்க முடியும்" என்று சொன்னார் பூரணர். "நல்லது! அவர்களை ரயிலடிக்கு அழைத்துச் சென்று, டிக்கட் வாங்கிக் கொடுத்துப் பஞ்சாபுக்கு அனுப்பிவிடுங்கள். என்னை அவர்கள் பார்க்கமுடியாது" என்றார் தீர்த்தர்.

பூரணருக்கோ அது கேட்டதும் கோபம் பொங்கி எழுந்தது. உடனே அவர், "சுவாமிகளே! நமஸ்காரம். நானும் போகிறேன். இனி யான் தங்களை என்றும் காணமாட்டேன். குடும்பத்தின் போஷகரான தாங்கள் அக் குடும்பத்தைக் கைவிட்டு வந்துவிட்டீர்கள். எப்படியோ அவர்கள் கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டு, தங்களைத் தரிசிக்க வந்தனர். அவர்கள் தங்களுக்கு வேற்று மனிதர்களா என்ன!

யாத்திரிகரைப்போல் சுவாமிகளைத் தரிசிக்கவே அவர்கள் வந்துளர். அவர்கள் காசு பணம் கேட்கப் போவதில்லை. தங்களை அழைத்துச் செல்லவும்கருதவில்லை. தாங்கள் அவர்களுக்குத் தரிசனம் தராவிடின் அது மகா கொடுமை யாகும். உறவினருக்குத் தரிசனம் கொடுக்க மறுக்கும் கருணையற்ற ஒருவரிடம் இனி யான் இருக்க இயலாது. அவர்கள் வேண்டுவது யாது? தங்களைத் தரிசித்து ஆறுதல்கொண்டு, தங்கள் புன்னகை கண்டு புளகம் அடைந்து தங்கள் திருஷ்டி கண்டு தேறுதல் எய்துவதேயாம்'' என்று சொல்லி அறையை விட்டு வெளியே செல்லலானார்.

உடனே சுவாமிகள் குலுங்கக் குலுங்க நகைத்து, "அன்ப! நல்லது; அவர்கள் உள்ளே வரட்டும்'' என்றார். இதற்குள் அவர்களும் அறைக்குள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும், சுவாமிகள் நகைமுகம் காட்டினர்; ஆயினும் துறவுக்குரிய தன்மை துலங்கி நின்றது. குழந்தையோ, "சுவாமீ! நான் நன்றாகப் பாடம் ஒப்பிப்பேனே'' என்றது. "அப்படியா!'' என்றார் சுவாமிகள். உடனே குழந்தை மடமட என்று பாடம் ஒப்பித்தது. தீர்த்தர் அதனைக் கவனத்துடன் கேட்டார். பின்பு, "குழந்தைக்கு ஒரு குலை திராட்சைப்

பழங்கொடு'' என்றார். அப்படியே பூரணர் இரண்டு குலை எடுத்துக் கொடுத்தார்.

பழக்குலை கண்டு பையன் திருப்தி கொள்ளவில்லை. அப்பா அன்புடன் எடுத்துக் கொள்வார் என்றே அவன் எதிர்பார்த்தான். சுவாமிகளின் மனையாளோ ஒரு மூலையில் அசைவற்று நின்றாள். இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. சிறிய தாயாரை மட்டும் தீர்த்தர் நோக்கி, யோக க்ஷேமம் விசாரித்தார்; இவ்வளவுதான். பின்பு, வந்தவழி நோக்கி யாத்திரிகர் திரும்பினர்.

## 11. போலீஸ் கண் காணிப்பு

அங்கும் இருப்பான், இங்கும் இருப்பான், ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான் என்பர். அவ்விதம் போலீஸார் அன்றுகூட யாவரையும் கண்காணித்து வந்தனர். 1904-ஆம் ஆண்டிலே அமெரிக்காவில் ராமதீர்த்தர் சொல்லியது ஈதாகும்:—"ஒரு சமயம் இந்தியாவிலே பெருங்கூட்டம் ஒன்றில் பேசினேன். பேசின விஷயத்தில் ராஜீயக் கலப்பு இருந்தது. ஹைகோர்ட் ஜட்ஜிகள், வக்கீல்கள், அரசாங்கத்தின் உயர்தர அதிகாரிகள் முதலிய பலர் கூடியிருந்தனர். பிரசங்கம்

முடிந்ததும், அவர்கள் என்னை அணுகி, “சுவாமீ! இனிமேல் இம்மாதிரி பேசவேண்டாம். பேசின், உங்கள் உடம்பு சிறையில் கிடந்துழல நேரும், அல்லது தூக்குமரத்தை எட்டிப் பார்க்கவும் நேரலாம்!” என்று நவின்றனர். அதற்கு ராமர் சொன்ன பதில்:—“அன்பர்களே! முப்பது வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு ஏசுநாதரை ஒருவன் காட்டிக் கொடுத்தான். அவனைப்போல் நான் நடக்க முடியாது. எனது ஆன்மாவைத் துண்டாக்கக் கூடிய வாளொன்று இவ்வியனுலகில் உளதோ? என்றும் அழியாத ஆன்மாவுக்குக் காயம் செய்யக் கூடிய ஆயுதந்தான் உண்டோ? ஆன்மாவுக்கு அழிவு என்பது இல்லை. அஃது என்றும் இருக்கவல்லது; இருப்பதுமாகும். உண்மை பேச நான் தயங்குவதோ? நன்று நன்று உங்கள் வாசகம்!”

அமெரிக்காவிலிருந்து சுவாமிகள் திரும்பி வடமதுரையில் தங்கியிருந்தனர். அவ்வேளை முதலில் ராமர் மொழிந்தது இது:—“பூரண தியாகம் செய்தாலன்றி நமது தேசம் சுதந்திரம் அடைய முடியாது. ராமனுடைய தலை போகவேண்டும்; பின்பு பூரணன் தலை விழவேண்டும், அதன் பின்னர் நூற்றுக் கணக்கான மக்களின் தலை போகவேண்டும். அங்

னமாயின், தேச சுதந்திரம் கிட்டும்; நமது இந்தியா தேசம், இந்தியத் தாய் சுதந்திரம் அடைந்தாக வேண்டும்.''

தீர்த்தரும் பூரணரும் பேசி 'யிருக்கையில், வேற்று மனிதர் இருவர் வந்தனர். சுவாமிகளைப் பார்க்க யாரோ வந்துளர் என்று பூரணர் எண்ணியிருந்தார். வந்த இருவரைக் கண்டதும், தீர்த்தர் குலுங்கக் குலுங்க நகைத்தார். அத்தகைய நகைப்பின் பான்மையைப் பூரணர் முதலில் உணரவில்லை. நகைத்து முடிந்ததும், ''என் தேச மக்களே, இராமனைக் கண் காணிக்க வந்திருக்கிறீர்கள் அல்லவா ? இராமனிடம் உள்ளொன்று, புறமொன்று என்பது கிடையாது. இராமனைக் கண்டுபிடித்தல் அவசியம் செய்யவேண்டிய வேலையே. அவனைக் கண்டுபிடியுங்கள்; அவனை உணர்ந்துகொள்ளுங்கள்; பின்னர் உலகம் உங்கள் காலடியில் கிடக்கும்'' என்று சுவாமிகள் சொன்னார்.

பூரணருக்கு அச் சொல் கேட்டுப் பின்னும் திகைப்பு உண்டாயிற்று. உடனே வந்த இருவரும் தீர்த்தரின் பாதம் பணிந்து, ''சுவாமீ! மன்னிக்க வேண்டும். சம்பளம் வாங்குகிறோம். அதற்கு உரிய கடமையைச் செய்யவே வந்தோம். தங்கள் முகத்தைக் கண்டதும் பாக்கியவான்கள் ஆனோம். தங்கள் அன்பு எங்களை

அடிமை கொண்டு விட்டது. நாங்கள் பாவிகள்" என்று சொல்லி விடைபெற்று ஏகினர். இருவரும் இரகசியப் போலீஸ் உளவாளிகள்.

இமய மலையின் சாரலிலே ஒரு குகையில் ராமதீர்த்தர் சின்னாள் தாமதித்தார். அப்போது, "தாங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை கவிழ்க்க விரும்பும் தேசீயவாதியென அதிகாரிகள் சந்தேகங் கொண்டுளர்; ஆதலால், தாங்கள் இருக்கும் இடம் அறிய நமது போலீஸார் எங்கும் தேடி அலைகின்றனர்" என்று சுவாமிகளுக்கு ஒரு கடிதம் வந்தது.

அது கண்டு சுவாமிகள் இவ்வாறு சொன்னார்:—"கோர்ட்டிலே நான் வழக்காடப் போவதில்லை. அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி என்னை எது வேண்டுமானாலும் செய்யட்டும். எனது இயற்கையை மாற்ற யாவரால் இயலும்! எனது தேசம் சுதந்திரமாக இருக்கவேண்டும். அந்தச் சுதந்திரத்தை இந்த ராமன் தேடி வைக்கப் போகிறானா, அல்லது வேறு ஆயிரம் ராமர்கள் தேடிவைக்கப் போகிறார்களா என்பதை ஆண்டவனே அறிவான்."

முப்பத்து மூன்று வயதளவே ராமதீர்த்தர் இந் நில உலகில் நிலவி இருந்தார். கங்கை நதி அழைப்பதற்குச் சில தினங்கள் முன்பாக ராமதீர்த்தரைக் காணலானார் பூரண

சிங். அப்போது பூரணரிடம் தீர்த்தர் புகன்றது யாதெனில் :— "டார்ஜீலிங் காடுகளிலே நிர்விகல்ப சமாதியில் இருந்தேன். அத்தகைய சமாதியின் இடையே இந்தியா தேசம் சுதந்திரம் பெறுமாக, இந்தியா தேசம் சுதந்திரம் அடைந்தாக வேண்டும் எனவும் ஸங்கல்பம் உண்டாயிற்று. தேச சேவகர் அனைவரும் ராமன் ஆட்டிவைக்கும்படி ஆடுவர். ராமனே மூல புருஷனாக விளங்குவான்.

சமாதியில் இருத்தல் என்றால், தன்னை மறந்து, முன்னவனது மெய்ப் புகழில் மூழ்கிக் கிடத்தல். சமாதி காலத்திலும் தேச சுதந்தரம் என்பதே தீர்த்தரின் சங்கல்பம் ஆயிற்று.

சுபம்!

6195a

The Jupiter Press, Madras. (19371231-2-11)